# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:153** **தேதி:-08.07.2014**

## மாநில செயலகக் கூட்டம்

அன்பார்ந்த தோழர்களே,

நமது BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில செயலகக் கூட்டம் சென்னையில் 06.07.2014 அன்று தமிழ் மாநில உதவி தலைவர் தோழர்t T.பிரேமா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் மாநில செயலாளர் தோழர் S.செல்லப்பா, மாநில உதவி தலைவர் தோழர் L.பரமேஸ்வரன், மாநில உதவி செயலாளர்கள் தோழர் S.சுப்ரமணியம், A.பாபு ராதாகிருஷ்ணன், மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன், மாநில உதவி பொருளாளர் தோழர் R.மகேந்திரன், மாநில அமைப்பு செயலாளர்கள் தோழர் A.முகமது ஜாபர், C.செல்வின் சத்யராஜ், D.கோபாலன், D.ஜெயமுருகன் TNTCWU மாநில செயலாளர் தோழர் C.வினோத் ஆகியோர் பங்கேற்றனர். விவாதங்களுக்கு பின் அதில் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

1) BSNL ஊழியர் சங்கத்தின் 7ஆவது தமிழ் மாநில மாநாட்டில் 10.10.2014 அன்று காலை பொது அரங்கமும், அதனை தொடர்ந்து சேவை மேம்பாட்டு கருத்தரங்கமும் நடத்துவது எனவும், அந்த நிகழ்ச்சிகளில், நமது அகில இந்திய பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநில தலைவர் தோழர் P.சம்பத், நமது தமிழ் மாநில தலைமை பொது மேலாளர் திரு C.V.ரெட்டி ஆகியோருடன் நமது மாநில செயலாளரும் உரை நிகழ்த்துவது. இதில் தமிழகத்தின் அனைத்து பகுதிகளில் இருந்தும் ஊழியர்களை திரட்டி நடத்துவது.

2) உணவு இடைவேளைக்கு பின்னர் மாலை 4 மணி முதல் சார்பாளர்கள் மட்டும் கலந்துக் கொள்ளும் பொருளாய்வுக் குழுவினை துவங்கி தொடர்ந்து நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

3) 11.10.2014 அன்று மாலை 5 மணி முதல் 7 மணி வரை தோழமை சங்க தலைவர்களை அழைத்து ஒரு கருத்தரங்கத்தை நடத்துவது.

4) தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து தலமட்ட கவுன்சில் (LOCAL COUNCIL) உறுப்பினர்களுக்கான வகுப்பு ஒன்றை 14.09.2014 அன்று வேலூரில் நடத்துவது.

5) சமீபத்தில் நடைபெற்ற சென்னை கூட்டுறவு சங்கத்தில் RGBக்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட நமது தோழர்களுக்கு கூட்டுறவு சங்கத்தில் மேற்கொண்டு நமது நடவடிக்கைகளை கொண்டு செல்வதற்கான பயிற்சி முகாம் 07.08.2014 அன்று சென்னையில் நடத்துவது எனவும் மாவட்ட சங்கங்கள் அனைத்து RGB தோழர்களையும் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

6) கூட்டுறவு சங்கத்தின் சட்ட திட்டங்களை மீறி முன்னர் RGB கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவான சங்க நிலத்தை நிலமாக பிரித்து கொடுப்பது என்பதனை மாற்றி இயக்குனர் குழுவில் கட்டிடடம் கட்டுவது என்று எடுக்கப்பட்ட முடிவு முறையற்றது. RGB கூட்டத்தில் எடுத்த முடிவை மீண்டும் RGB கூட்டத்தை கூட்டியே மாற்ற வேண்டும். எனவே இயக்குனர் குழுவில் கட்டிடம் கட்டுவது என்று எடுக்கப்பட்ட முடிவு தவறானது. எனவே அதனை எதிர்த்து அனைத்து RGBக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

7) தமிழ் மாநில/ மாவட்ட நிர்வாகங்களை எதிர்த்து நடைபெற்ற 04.07.2014 ஆர்ப்பாட்டம் மாநிலம் முழுவதும் வெற்றிகரமாக நடத்திய கிளை/ மாவட்ட சங்கங்களுக்கு செயலக கூட்டம் பாராட்டுதல்களை தெரிவித்ததோடு, 11.07.2014 அன்று நடைபெற உள்ள தர்ணா போராட்டத்தை வெற்றிகரமாக அனைத்து ஊழியர்களையும் திரட்டி மாவட்டங்களில் சக்தியாக நடத்திட வேண்டும். மேலும், கடலூர், பாண்டிச்சேரி மற்றும் வேலூர் மாவட்ட சங்கங்கள் தங்கள் ஊழியர்களை சக்தியாக திரட்டி சென்னை தலைமை பொதுமேலாளர் அலுவலகத்தில் நடைபெறும் தர்ணாவிற்கு அழைத்து வரவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. நமது போராட்ட அறிவிப்பை தொடர்ந்து பொதுமேலாளர் (HR) இரண்டு முறை நமது மாநில சங்கத்தை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தினார். அவரிடம் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளுக்கு பின் WORKS COMMITTEEகளை மாதம் ஒரு முறை நடத்த வேண்டும் என தமிழ் மாநில நிர்வாகம் ஒரு சுற்றறிக்கையினை பொது மேலாளர்களுக்கு அனுப்பியுள்ளது. அதே போல ஒப்பந்த ஊழியர்கள் பிரச்சனையில் கார்ப்பரேட் அலுவலகம் இது வரை அனுப்பி உள்ள 7 உத்தரவுகளை மீண்டும் மாவட்ட பொது மேலாளர்களுக்கு அனுப்பி அதனை கறாராக அமுல் படுத்த வேண்டும் என்றும் மாநில நிர்வாகம் கடிதம் அனுப்பியுள்ளது. மேலும் ஊழியர்கள் தங்களின் பிரச்சனைகளை வாரா வாரம் புதன் கிழமை மாலை மாவட்ட நிர்வாகங்களை சந்தித்து முறையிடலாம் எனவும் அனைத்து பொது மேலாளர்களும் வாரம் ஒரு முறை அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு பேட்டி கொடுக்க வேண்டும் எனவும் உத்தரவு வெளியிட்டுள்ளார். ஆனாலும் நமது கோரிக்கைகள் முழுமையாக தீரும் வரை நமது போராட்டத்தை சக்தியாக நடத்த திட்டமிடுவோம். எனவே 11.07.2014 தர்ணா போராட்டத்தினை மாவட்ட சங்கங்கள் முழு மூச்சாக ஊழியர்களை திரட்டி நடத்திட வேண்டும்.

8) 09.07.2014 அன்று தென்காசியில் BSNL உழைக்கும் மகளிர் ஒருங்கிணைப்புக் குழுவின் மாநிலக் குழுக் கூட்டம் நடைபெற உள்ளது. மாநிலக் குழு உறுப்பினர்களை அந்தக் கூட்டத்திற்கு அனுப்பி வைக்கும் பணியினை மாவட்ட சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும். அந்தக் கூட்டத்தில் தமிழ் மாநில உதவி செயலாளர் தோழர் C.பழனிச்சாமி அவர்களும், மாநில அமைப்பு செய்லாளர் தோழர் D.கோபாலன் அவர்களும் மாநில சங்கத்தின் சார்பாக கலந்துக் கொள்வார்கள்.

9) 2014, ஆகஸ்ட் மாதத்தில் TNTCWU சங்கம் சார்பாக உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் நடத்துவது என சமீபத்தில் கூடிய அதன் மாநில செயற்குழு முடிவு செய்துள்ளது. அந்த இயக்கத்தில் நமது தோழர்களும் முழுமையாக கலந்துக் கொண்டு வெற்றிகரமாக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

10) AIBDPA சங்கத்தின் மத்திய செயற்குழு 29.07.2014 அன்று கோவையில் நடைபெற உள்ளது. அதில் நமது தமிழ் மாநில செயலாளர் கலந்துக் கொள்வார்.

11)

12) BSNL-MTNL இணைப்பு தொடர்பாக முடிவெடுக்கும் கூட்டம் 19.07.2014 அன்று புதுடெல்லியில் நடைபெற உள்ளது. ராஜ்கோட் மத்திய செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்ட அந்தக் குழுவில் நமது மாநில செயலாளர் தோழர் S.செல்லப்பாவும் ஒரு உறுப்பினர் என்பதால் அந்தக் கூட்டத்தில் அவர் கலந்துக் கொள்வார்.

13) அக்டோபர் 10,11 &12 தேதிகளில் திருச்சியில் நமது தமிழ் மாநில மாநாடு நடைபெறுவதை ஒட்டி, இதுவரை மதுரை, விருதுநகர் ஆகிய இரண்டு மாவட்ட சங்கங்கள் தங்களின் மாவட்ட மாநாட்டை நடத்தி முடித்து உள்ளன. இதர மாவட்டங்கள் கீழே கொடுக்கப்பட்ட தேதிகளில் தங்களின் மாவட்ட மாநாட்டை நடத்த உள்ளதாக தெரிவித்து உள்ளனர்.

| மாவட்டம் | மாவட்ட மாநாடு தேதி |
|---|---|
| கும்பகோணம் | 25.07.2014 |
| தஞ்சை | 26.07.2014 |
| திருநெல்வேலி | 10.08.2014 |
| நீலகிரி | 20&21.08.2014 |
| ஈரோடு | 23 & 24.08.2014 |
| கோவை | 25 & 26.08.2014 |
| தலைமை பொதுமேலாளர் அலுவலகம் | 04.09.2014 |
| கடலூர் | 05.09.2014 |
| நாகர்கோவில் | 16.09.2014 |
| தூத்துக்குடி | 17.09.2014 |
| சேலம் | 20.09.2014 |
| காரைக்குடி | 23.09.2014 |
| தர்மபுரி | 26.09.2014 |
| வேலூர் | 04.10.2014 |

பாண்டி, ப்ராஜெக்ட் மற்றும் சிவில் பகுதி மாவட்ட மாநாடுகள் விரைவில் தேதி அறிவிக்கப்படும், மாநில மாநாட்டை நடத்தும் திருச்சி மாவட்ட சங்கம், மாநில மாநாடு முடிந்த பின்னர் தனது மாவட்ட மாநாட்டை நடத்தும். அனைத்து மாவட்ட சங்கங்களும் மாநாடுகளை திட்டமிட்ட தேதிகளில் மிகச்சிறப்பாக நடத்திட வேண்டும். அனைத்து மாவட்ட சங்கங்களும் மாநில மாநாட்டின் நிதிக் கோட்டாவை முழுமையாக விரைவாக மாநில சங்கத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

மாநில செயலகக் கூட்டத்தில் கலந்துக் கொண்ட அனைத்து தோழர்களுக்கும் மாநில உதவி செயலாளர் தோழர் S.சுப்ரமணியம் நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(S.செல்லப்பா)**

**மாநில செயலாளர்.**